**அனுப்புநர்**

திருமதி.செ.அமுதவல்லி,
M.Sc.,B.Ed.,M.Lis.,DEPA.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.

**ந.க.எண். 125746/பி1/2019** **நாள் : 02.01.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மொழி சிறுபான்மையினர் பள்ளி மாணாக்கர்கள் பகுதி I–ல் தமிழ் பாடம் அல்லாத பிறமொழிப் பாடம் எழுதுவது – தொடர்பாக.

**பார்வை :**
1. அரசுத் தேர்வுகள் இயக்கக கடித ந.க.எண்.132141/பி1/2019, நாள்.18.12.2019.
2. அரசுத் தேர்வுகள் இயக்கக கடித ந.க.எண்.125746/பி1/2019, நாள்.30.12.2019.

******

தமிழகத்தில் சிறுபான்மையினர் மொழி பயலும் மாணவர்களுக்கு 2020 முதல் 2022 வரையிலான கல்வி ஆண்டுகளுக்கு தமிழ் கட்டாயம் கற்றல் சட்டம் – 2006–ல் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது குறித்து பள்ளிகளுக்கு அறிவுரை வழங்கிட பள்ளிக்கல்வித்துறைக்கு பார்வை 1–ல் காணும் கடிதத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது.

மொழி சிறுபான்மையினர் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர்கள் மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு பகுதி I–ல் அவரவர் மொழிப்பாடத்தில் தேர்வெழுத விண்ணப்பித்துள்ளனரா என்பதனை உறுதி செய்திடவும், இந்நாள்வரை விண்ணப்பிக்காத சிறுபான்மையினர் மொழி பயிலும் மாணாக்கர்கள், பகுதி I–ல் அவரவர் மொழிப்பாடத்தில் விண்ணப்பிக்க சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை 2–ல் காணும் கடிதத்தின் வாயிலாக 04.01.2020 வரை பெயர் பட்டியல் தயாரிப்பதற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதால் அன்றைய தேதிக்குள் மேற்காண் பணியினை விரைந்து முடிக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இணை இயக்குநர் (பணியாளர்)**

பெறுநர்

1. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர்கள்